ISSN 2394-6385(Print)
ISSN 2394-6393(Online)

# வெளிநாடு செல்பவர்களின் சாதகங்களில் ராகு மற்றும் கேதுவின் நிலை

சி.செல்வராஜ் *1, முனைவர் ஆ.கலைவாணி 2

[1]ஆய்வாளர், [2]உதவிப்பேராசிரியர்

[1,2] ஜோதிடவியல் துறை, VISTAS பல்லாவரம், சென்னை - 600 117.

**ஆய்வுச் சுருக்கம்** — வெளிநாடு சென்று பட்ட மேற்படிப்பை முடித்து அங்கேயே வேலையில் சேர்ந்து, வாழ்க்கை நடத்த ராகு மற்றும் கேது சாய கிரகங்கள் சாதகருக்கு எப்படி ஒத்துழைக்கின்றன என்பதை இங்கு எடுத்துக் கூறியிருக்கிறோம்.

***திறவுச்சொற்கள் —*** *ஜோதிடம்; கோள்கள்; சாதகம்; பஞ்சபூதங்கள்; ராகு; கேது.*

## 1. முன்னுரை

பல இளைஞர்களுக்கு வெளிநாடு சென்று படித்து, அங்கேயே வேலையில் சேர்ந்து விட வேண்டும் என்ற எண்ணம் மனதில் எரியும் நெருப்பாக, தீயாக எரிகிறது. அதற்காக அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள், நடவடிக்கைகள் ஏராளம். அப்படி அயராது முயற்சிப்பவர்கள் அனைவருக்குமே அந்த பாக்கியம் கிடைப்பது இல்லை. அப்படி வேலை கிடைத்தவர்கள் தங்களின் குடும்பத்திற்காக வெளிநாட்டில் கருத்தாக பாடுபட்டு சொந்த ஊரில் நிலம், வீடு, வண்டி வாகனம் வாங்குகிறார்கள்.

அவ்வாறு வெளிநாடு செல்லும் பாக்கியம் கிடைத்தவர்களுக்கு அவர்களின் சாதகத்தில் காரக கிரகங்கள் ராகு மற்றும் கேது எப்படி வழி வகுத்துக் கொடுக்கின்றது என்பதை இங்கு தெளிவுபடுத்தியுள்ளோம்.

## 2. ராகு

இராகுவும், கேதுவும் நிழல் கிரகங்கள் ஆகும். இவை எதிர் திசையில் சுற்றக் கூடிய கிரகங்கள் ஆகும். குப்பையில் கிடந்தவனை கோபுரத்தில் கொண்டு சேர்ப்பதும் கோபுரத்தில் இருந்தவனை குப்பை மேட்டில் புதைப்பதும் ராகுவே. தந்தை வழி வம்சத்தைப் பற்றி சொல்லக் கூடிய கிரகம். சோதிடத்தில் ‘ஞான காரகன்” என்று அழைக்கப்படுவார்.

*இராகுவின் பிற பெயர்கள்* - பாம்பு, கரும்பாம்பு, நஞ்சு ஆகியன.

### 2.1 கோள் சாரப்படி

- ராகு ஒரு ராசியை கடக்க 1½ வருடங்கள் ஆகிறது.
- ராகு இராசி மண்டலத்தை கடக்க - 18 வருடங்கள் ஆகின்றன.
- இடம்: பொந்துகள், குழிகள், படரும் கொடிகள் உள்ள இடங்கள்

### 2.2 தொழில்கள்

வட்டித் தொழில், அடகு பிடித்தல், நிழல் தொழில், மாந்திரீகம், மந்திரவித்தை, ஜோதிடம், ஏற்றுமதி, இறக்குமதி, வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பும் ஏஜென்சி போன்ற தொழில்களை குறிக்கும்.

### 2.3 காரகத்துவம்

- இராகுவிற்கு பகை கிரகங்கள் அதிகம் இருப்பதால் சுபப்பலன் நடப்பது மிகக்குறைவு.


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131003

- குணக் கேட்டை அதிகம் தரும்
- பல நல்லவர்கள் கெட்டவர்கள் ஆவதும், பலர் ஊரை விட்டு வேறு ஊர் போவதற்கு இராகுவின் கோட்சாரமே காரணம் ஆகும்.
- இராகு போவது எந்த கிரகமாக இருந்தாலும் நின்ற கிரகத்திற்கும் தகுந்த பாதிப்பை ஏற்படுத்தும்.
- அன்னிய நாடு செல்லுதல், நாடு கடத்தப்படுதல் போன்றவற்றை குறிக்கும்.

## 3. கேது

- தீடீர் மாற்றம் தரும் கிரகம்
- கேது - நிழல் கிரகம் ஆகும்
- சூரிய, சந்திர கிரகணங்கள் ஏற்பட ராகு, கேதுக்களே காரணம் ஆகிறது.
- கேது மோட்சக் காரகன் என்று அழைக்கப்படுகிறது.

*மற்ற பெயர்கள் -* பாம்பு, செம்பாம்பு ஆகியன.

### 3.1 கோள் சாரத்தில் கேது

- ஒரு ராசியை கடக்க 1½ வருடங்கள் ஆகிறது.
- இராசி மண்டலத்தை கடக்க - 18 வருடங்கள் ஆகின்றன.

### 3.2 காரகத்துவம்

- லக்னத்திற்கு 7-ல் கேது திருமண வாழ்வில் பிரச்சினை, வழக்கு, போலீஸ் ஸ்டேசன் போன்ற பிரச்சினைகளை கொடுக்கிறது.
- அந்நிய தேச வாசம் தொழில்கள்
- கேதுவுடன் - சந்திரன், சுக்கிரன், சனி, ராகு போன்ற கிரகங்கள் தொடர்பு ஏற்பட்டால், சாதகர் வெளிநாடு சென்று வேலையில் சேருவார்.

### 3.3 தொழில்கள்

நெசவு, வக்கீல், பஞ்சாயத்து செய்தல், அறுவை சிகிச்சையாளர், பருத்தி காப்பிக் கொட்டை மற்றும் மருந்து வியாபாரம், ஆன்மீகம், தெய்வீகம், வைதீகம் சம்பந்தப்பட்ட தொழில்கள்.

### 3.4 விதிகள்

1. லக்னம் / லக்ன பாவாதிபதி
2. 6ம் பாவம் / 6ம் பாவாதிபதி
3. 9ம் பாவம் / 9ம் பாவாதிபதி
4. 10ம் பாவம் / 10ம் பாவாதிபதி
5. 12ம் பாவம் / 12ம் பாவாதிபதி

இவர்களுடன் ராகு, கேது தொடர்பு பெற்றால் சாதகர் வெளிநாடு செல்வார்.

***உதாரண சாதகம் - 1***

பெயர் - ரேணு
பிறந்த தேதி - 18/08/1988 வியாழன்
நேரம் - 00.01.00 (24 hrs).
பிறந்த இடம் - கோயமுத்தூர்
ஜென்ம லக்னம் - ரிஷபம்
ஜென்ம ராசி - கன்னி
ஜென்ம நட்சத்திரம் - சித்திரை - 2 (செவ்)
லக்ன புள்ளி - கார்த்திகை - 3 (சூரி)

| | | | |
|---|---|---|---|
| | | ல குரு | சுக் |
| ராகு | ராசி | | மா |
| | | | சூரி புதன் கேது |
| சனி | | | சந்தி |


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131003

| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>குரு<br>சனி<br>ராகு | | |
| ல<br>சுக் | நவாம்சம் | | |
| | | | புதன் |
| செவ் | | கேது<br>மா | சந்தி |

***சாதகரின் வயது***

As on - 2025 - 12 - 31
DOB - 1988 - 08 - 18

37 - 04 - 13

***தசா புக்தி***

- குரு தசை -12/12/2010 – 17/12/2026 - 16 years
- குரு தசையில் கேது புத்தி - 23/10/2017 – 30/10/2018 - 11 months 6 days

***விதிகள் படி***

1. லக்னம் / லக்னாதிபதி
   லக்னம் - ரிஷபம்
   சிம்மம் - கேது 11-ம் பார்வை - மிதுனம் சுக்கிரன் தொடர்பு
   கேது - லக்னாதிபதி தொடர்பு
   லக்னாதிபதி - சுக்கிரன் - திருவாதிரை - ராகு நட்சத்திர சாரம் பெற்றுள்ளார்.
   ராகு - லக்னாதிபதி தொடர்பு
2. 6-ம் பாவம் - துலாம்
   6-ம் பாவாதிபதி - சுக்கிரன் - திருவாதிரை - ராகு நட்சத்திர சாரம் பெற்றுள்ளார்
   ராகு - 6-ம் பாவாதிபதி தொடர்பு
   கேது 11-ம் பார்வை - 6-ம் பாவாதிபதி சுக்கிரன் பார்வை
   கேது - 6-ம் பாவாதிபதி தொடர்பு
3. 9-ம் பாவம் - மகரம்
   9-ம் பாவாதிபதி - சனி - மூலம் - கேது நட்சத்திர சாரம் பெற்றுள்ளார்
   கேது - 9-ம் பாவாதிபதி தொடர்பு
4. 10-ம் பாவம் - கும்பம்
   10-ம் பாவத்தில் - ராகு உள்ளார். ராகு - 10ம் பாவம் தொடர்பு
   10-ம் பாவாதிபதி - சனி - மூலம் - கேது நட்சத்திர சாரம் பெற்றுள்ளார்
   கேது - 10-ம் பாவாதிபதி தொடர்பு
5. 12-ம் பாவம் - மேஷம்
   ராகு 3-ம் பார்வை - 12-ம் பாவத்தை பார்க்கிறார்.
   ராகு - 12ம் பாவம் தொடர்பு
   12ம் பாவாதிபதி - செவ்வாய் - ரேவதி - புதன் சாரம்
   சிம்மத்தில் புதன் - கேது இணைவு
   கேது - 12-ம் பாவாதிபதி தொடர்பு

சாதகர் குரு தசையில் – 17/12/2010 – 17/12/2026
குரு தசை கேது புத்தியில் – 23/10/2017 – 30/10/2018 – ல் 2017ல் அமெரிக்கா சென்று வேலையில் அமர்ந்து வாழ்ந்து வருகிறார்

***உதாரண சாதகம் - 2***

பெயர் - D. பிரவீன்
பிறந்த தேதி - 19/05/1988 வியாழன்
நேரம் - 07:32:00 (24 hrs.)
பிறந்த இடம் - ஈரோடு
ஜென்ம லக்னம் - ரிஷபம்
ஜென்ம ராசி - மிதுனம்
ஜென்ம நட்சத்திரம் - திருவாதிரை - 2 (ராகு)
லக்ன புள்ளி - மிருக சீரிடம் - 2 (செவ்வாய்)


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131003

| | | | |
|---|---|---|---|
| | குரு | ல<br>சூரி<br>புதன் | சந்தி<br>சுக் |
| செவ்<br>ராகு | **ராசி** | | மா |
| | | | கேது |
| சனி | | | |

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சனி |
| சூரி | **நவாம்சம்** | | மா |
| சந்தி | | | |
| | செவ்<br>சுக்<br>கேது | குரு | ல<br>புதன் |

***சாதகரின் வயது***

As on - 2025 - 12 - 31
DOB - 1988 - 05 - 19
37 - 07 - 12

***தசா புக்தி***

- சனி தசை - 04/08/2013 – 03/08/2032 - 19 years
- கேது புத்தி - 17/04/2019 – 25/05/2020 - 1 year 1 month 9 days

***விதிகள் படி***

1. லக்னம் - ரிஷபம்
 லக்னாதிபதி - சுக்கிரன் - மிருகசீரிடம் - நட்சத்திரம் - செவ்வாய் சாரம் பெற்றுள்ளார்
 கும்பத்தில் செவ்வாய் - ராகுவுடன் இணைந்து உள்ளார்
 ராகு - லக்னாதிபதி தொடர்பு உள்ளது
2. 6-ம் பாவம் - துலாம்
 6-ம் பாவாதிபதி - சுக்கிரன்
 கேது 3-ம் பார்வை - 6ம் பாவம் துலாம் பார்க்கிறார்.
 கேது - 6-ம் பாவத் தொடர்பு
 கேது 11-ம் பார்வை - சுக்கிரனை பார்க்கிறார்
 கேது - 6-ம் பாவாதிபதி தொடர்பு
3. 9-ம் பாவம் - மகரம்
 9-ம் பாவாதிபதி - சனி - மூலம் - கேது சாரம் பெற்றுள்ளார்
 கேது - 9ம் பாவாதிபதி சனி தொடர்பு
 ராகு 11-ம் பார்வை - 9-ம் பாவாதிபதி சனியை பார்க்கிறார்
 ராகு 9-ம் பாவாதிபதி சனி தொடர்பு
4. 10-ம் பாவம் - கும்பம்
 10-ம் பாவத்தில் - ராகு இருக்கிறார்
 ராகு - 10ம் பாவம் தொடர்பு
 10-ம் பாவாதிபதி - சனி - மூலம் - கேது சாரம் பெற்றுள்ளார்
 கேது - 10-ம் பாவாதிபதி சனி தொடர்பு
 ராகு 11-ம் பார்வை - 10-ம் பாவாதிபதி - சனியை பார்க்கிறார்
 ராகு 10-ம் பாவாதிபதி தொடர்பு
5. 12-ம் பாவம் - மேஷம்
 ராகு 3-ம் பார்வை - 12ம் பாவத்தை பார்க்கிறார்
 ராகு - 12ம் பாவத் தொடர்பு
 12-ம் பாவாதிபதி - செவ்வாய்
 செவ்வாய் - ராகுவுடன் இணைந்துள்ளார்
 ராகு - 12ம் பாவாதிபதி தொடர்பு

சாதகர் சனி தசையில் – 04/08/2013 – 03/08/2032
சனி தசை கேது புத்தி – 17/04/2019 – 25/05/2020 – ல் 2019-ல் சனி திசை கேது புத்தியில் அமெரிக்கா சென்று வேலையில் அமர்ந்து வாழ்ந்து வருகிறார்.

## 4. முடிவுரை

சாயா கிரகங்கள் என்று சொல்லப்படும் ராகு மற்றும் கேது கிரகங்கள் வாழ்க்கையில் திடீர்


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131003

மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவை. இவைகள் சாதகரை சொந்த ஊரை விட்டு வெளியேற்றி, அந்திய தேசத்தில் குடியேற வைக்கும்.

இந்த கிரகங்கள் லக்னம், 6-ம் பாவம், 9-ம் பாவம், 10-ம் பாவம், 12-ம் பாவம் மற்றும் அதன் பாவாதிபதிகளுடன் தொடர்பு ஏற்படும் போது சாதகர் திடீரென்று வெளிநாடு புறப்பட்டு செல்வார் என்பது தின்னம்.

## பார்வை நூல்கள்

[1] செங்கோட்டை பிரம்மஸ்ரீ பா.ஆ.விசுவநாத பாரதியார் கீழச்செவல்பட்டி, பிரம்மஸ்ரீ ம.வைத்தியநாத ஸ்பதியார் இவர்களின் பேருதவி கொண்டு பிக்கிபேட்டை கணித ஜோதிஷ, ஆயுர்வேத சித்த வைத்திய சிற்ப சாஸ்திர பண்தரும் R.V.குமாரஸ்வாமி-ஆச்சாரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சிதம்பரம் தாலுக்கா K.ஆரூர் மிராசதார் திருவாளர் M.இரத்தின சபாபதிப் பிள்ளை அவர்களின் முயற்சியால், வடமொழியில் ஸ்ரீ கல்யாண வாமனார் இயற்றியருளிய சாராவளியின் தமிழ் மொழிபெயர்ப்பு, கேசரி அச்சுக்கூடம், சென்னை,1939.

[2] வாஸ்து ஸ்ரீ சக்ரா ரூ ஜோதிட சக்ரவர்த்தி - நந்தா துரை சுவாமி, பத்தாம் பாவமும் உத்தியோக யோகமும், ஸ்ரீ ஆரோ மீரா பிரசுரம், தம்மம்பட்டி Po, சேலம் மாவட்டம், டிசம்பர் 2020.

[3] ஆசிரியர்: V.ராமலிங்கம், ஜோதிட நூலாசிரியர், செல்லம் ஜோதிட நிலையம், சாதக அலங்காரம், பதிப்பகம் - ஸ்ரீ ஆனந்த நிலையம், 7/14, புதூர் முதல் தெரு, அசோக் நகர், சென்னை, பிப்ரவரி 2023.

[4] பக்தி யோக சீனிவாச கேசவன், பத்தாம் பாவம் தொழில், ஸ்ரீ ஆனந்த நிலையம், 7/14, புதூர் முதல் தெரு, அசோக் நகர், சென்னை, ஜனவரி 2015.

[5] மு.மாதேஸ்வரன், 12 பாவகப் பலன்கள், விஜயா பதிப்பகம், 20, ராஜா வீதி, கோயமுத்தூர், பதிப்பு வருடம், செப்டம்பர் 2013

[6] செ.தேவசேனாதிபதி, ஜோதிடம் முன்னூறு என்றும் புளிப்பாணி ஜோதிடக் களஞ்சியம் மூலமும் உரையும், ஸ்ரீ ஆனந்த நிலையம், 7/14, புதூர் முதல் தெரு, இரண்டாவது நிழற்சாலை, அசோக் நகர், சென்னை, 2020.

[7] எஸ்.பி.சுப்ரமணியன் LCE, ராகு - கேது தரும் யோகங்களும், தோஷங்களும் பரிகாரங்களுடன், நர்மதா பதிப்பகம், நல்ல நூல் வெளியீட்டாளர்கள், 10, நானா தெரு, தி.நகர் - தலைமை அஞ்சலத்தை ஒட்டிய தெரு, பாண்டி பஜார், தியாகராய நகர், சென்னை, நவம்பர் 2020.

[8] தெய்வக்ஞ சிரோமணி, பி.எஸ்.ஐயர், மகான் பி.எஸ்.ஐயர் அருளிய ஜோதிட அறிவியல், ஸ்ரீ இராகவேந்திரர் சமூக மற்றும் கல்வி அறக்கட்டளை, 24, படப்படித் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை, ஸ்ரீ கெளரி ஜோதிட நிலையம், 9. இராராஜாம் முதல் குறுக்குத் தெரு, ஞானமூர்த்தி நகர் விரிவாக்கம், அம்பத்தூர், சென்னை, மே 2017.

[9] மு. மாதேஸ்வரன், லக்னங்களில் காரகங்கள் (பாகம் 8) ராகுவின் புதிர்கள், விஜயா பதிப்பகம், 20, ராஜா வீதி, கோயமுத்தூர், 2023

[10] ஜோதிட நல்லாசிரியர் A.தேவராஜ், உயர் கணித சாரா ஜோதிட முறையில் சாதகமும் தொழில் அமைப்பும் (பாகம் 1), ஸ்ரீ பிரகஸ்பதி ஜோதிட பயிற்சி மையம், நெ.68, 3வது தெரு, பி.ஜி.அவென்யூ, காட்டுப்பாக்கம், சென்னை, முதல் பதிப்பு, ஆகஸ்டு 2012.

[11] ஜோதிட வித்வான், A.பிரகஸ்பதி, நவீன முறையில் தசாபுக்தி பலன்கள் கூறுவது எப்படி?, கற்பகம் புத்தகாலயம், 4/2, சுந்தரம் தெரு, (நடேசன் பூங்கா அருகில்), தியாகராய நகர், சென்னை, நவம்பர் 2010

[12] பன்மொழி புலவர் ஜோதிஷ பானு பேராசிரியர் புலிப்பாணி சுந்தர வரதாச்சாரியார், சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர், சரசுவதி மகால், தஞ்சாவூர், நட்சத்திர சிந்தாமணி முதல் பாகம், இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு, 2007.


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131003